

# நாடுகடத்தல் குறித்த புதிய சட்டங்கள் என்ன?

**நவம்பர் 2024 இல், ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோரைப் பாதிக்கும் புதிய சட்டங்களை நிறைவேற்றியது. புதிய சட்டங்கள் மற்றும் அவை உங்களை எவ்வாறு பாதிக்கலாம் என்பது பற்றிய விளக்கம் இங்கே தரப்பட்டுள்ளன.**

*இந்த வளத்தை Human Rights Law Centre மற்றும் Refugee WAVE தயாரித்துள்ளன.*
*இது சட்ட ஆலோசனையாகப் பயன்படுத்தப்படுவதற்காக அல்ல.*

# இந்தச் சட்டங்களால் பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடி-யவர்கள்

- குடிவரவுத் தடுப்புக்காவலில் உள்ளவர்கள்
- பிரிட்ஜிங் R விசாக்களில் உள்ளவர்கள்
- 'புறப்படும் அடிப்படையில்' பிரிட்ஜிங் E விசாக்கள் வழங்கப்பட்டவர்கள்.

இந்த சட்டங்கள் நியாயமற்றவை. அவை விசா நிலையை அடிப்படையாகக் கொண்டு மக்களைத் தண்டிக்கும், மேலும் அவை குடும்பங்களைப் பிரித்து நமது சமூகங்களுக்குத் தீங்கு விளைவிக்கும். அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் கண்டறிவது முக்கியம், மேலும் நீங்கள் பாதிக்கப்படலாம் என்று நினைத்தால் உடனடியாக ஆலோசனை மற்றும் உதவியைப் பெறுவதை உறுதிசெய்வது முக்கியம்.

# 1. அகற்றுதல் உத்தரவுகள்

## அகற்றுதல் உத்தரவுகள் என்றால் என்ன?

**‘அகற்றுதல் உத்தரவு’ என்பது, உள்நாட்டு அலுவல்கள் திணைக்களமானது ஆஸ்திரேலியாவிலிருந்து ஒருவரை வெளியேற்ற உதவும் வகையில் ஏதாவது செய்யுமாறு அந்த நபரிடம் கேட்கும் எழுத்துப்பூர்வமான அறிவுறுத்தலாகும். இந்தப் புதிய சட்டங்கள் சமூகத்திலுள்ள குறிப்பிட்ட மக்களுக்கு அகற்றுதல் உத்தரவுகளைப் பிறப்பிக்க அமைச்சரை (அல்லது அவரது பிரதிநிதிகளை) அனுமதிக்கின்றன.**

அகற்றுவதற்கான உத்தரவு எழுத்துப்பூர்வமாக வழங்கப்பட வேண்டும். ஓர் அகற்றுதல் உத்தரவு என்பது கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பது, ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பது, தகவல்களை வழங்குவது, ஒரு சந்திப்பு அல்லது நேர்காணலில் கலந்து கொள்வது அல்லது ஒரு தூதரகத்தைத் தொடர்புகொள்வது போன்ற ஏதாவது ஒன்றைச் செய்வதற்கான அறிவுறுத்தலாக இருக்கலாம்.

## யாருக்கு அகற்றுதல் உத்தரவு கிடைக்கக்கூடும்?

**பின்வரும் நபர்களுக்கு அகற்றுதல் உத்தரவு வழங்கப்படலாம்:**

- **தடுப்புக்காவலில் உள்ளவர்;**
- **பிரிட்ஜிங் R விசா வைத்திருப்பவர்; அல்லது**
- **'புறப்படும் அடிப்படையில்' பிரிட்ஜிங் E விசாவை வைத்திருப்பவர்.**

(அதாவது, அந்த நபர் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற ஏற்பாடுகளைச் செய்வதால் அது வழங்கப்பட்டது). இவை பொதுவாக ஒன்றுக்கு மேற்பட்ட முறை அமைச்சர் தலையீட்டை நாடியவர்களுக்கு அல்லது வேறு எந்தக் குடிவரவு வழக்குகள் அல்லது விண்ணப்பங்கள் நடைமுறையில் கொண்டிருக்காதவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஒருவர் இணங்குவது மிகவும் கடினமாகவோ அல்லது சாத்தியமற்றதாகவோ இருந்தாலும் கூட, அகற்றுதல் உத்தரவை வழங்க முடியும். ஒருவர் ஆஸ்திரேலியாவில் நீண்ட காலமாக வசித்து வருகிறாரா, அல்லது அவர்களுக்கு ஆஸ்திரேலியாவுடன் குடும்பம் அல்லது பிற தொடர்புகள் உள்ளதா என்பது முக்கியமல்ல.

குழந்தைகளுக்கு அகற்றுதல் உத்தரவை வழங்க முடியாது, ஆனால் அதை பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு வழங்கலாம்.

## அகற்றுதல் உத்தரவுகள் என்றால் என்ன?



**அகற்றுதல் உத்தரவைப் பின்பற்றாமல் இருப்பது ஒரு குற்றவியல் (criminal) குற்றமாகும். குறைந்தபட்சம் 12 மாத சிறைத்தண்டனையும், அதிகபட்சமாக 5 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் கட்டாய தண்டனையாக உள்ளது.**

உத்தரவுக்கு இணங்காததற்கு நியாயமான காரணம் ஒருவரிடம் இருந்தால் அது ஒரு தற்காப்பாகக் கருதப்படும். ஆனால், ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்றப்பட்டால் துன்புறுத்தல் அல்லது வேறு எதிர்மறை விளைவுகள் குறித்த பயம் நியாயமான காரணமில்லை.

## நான் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் தொடர்பு விவரங்கள் உள்நாட்டு அலுவல்கள் திணைக்களத்துடன் எப்போதும் புதுப்பித்த நிலையில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். எந்தக் கடிதங்களையும் அல்லது மின்னஞ்சல்களையும் தவறவிடாமல் இருப்பது முக்கியம்.

நீங்கள் அகற்றுதல் உத்தரவைப் பெற்றால், உடனடியாக ஒரு குடிவரவு வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ளவும்.

# 2. பாதுகாப்புக் கண்டறிதல்களை மறுபரிசீலனை செய்தல்

**புதிய சட்டங்கள், சமூகத்தில் சிலருக்கு பாதுகாப்பு கண்டறிதல்களை மறுபரிசீலனை செய்யும் அமைச்சரின் (மற்றும் அவரது பிரதிநிதிகளின்) அதிகாரத்தை விரிவுபடுத்துகின்றன.**

## பாதுகாப்புக் கண்டறிதல் என்றால் என்ன?

**பாதுகாப்பு விசா விண்ணப்பத்தை மதிப்பிடு-ம்போது, ஒரு நபருக்கு குடிவரவுச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற முடிவுதான் 'பாதுகாப்புக் கண்டறிதல்' ஆகும்.**

அதாவது, அந்த நபர் தனது சொந்த நாட்டில் தீங்கு விளைவிக்கும் அபாயத்தை எதிர்கொள்ள நேரிடும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

**ஒரு நபருக்கு ஒரு பாதுகாப்புக் கண்டறிதல் இருந்தால், அவர்களிடம் விசா இல்லாவிட்டாலும், பாதுகாப்புக் கண்டறிதலுடன் தொடர்புடைய நாட்டிற்கு அவர்களை நாடு கடத்த முடியாது.**

ஒரு நபருக்கு பாதுகாப்பு விசா இல்லாவிட்டாலும் கூட, அவருக்கு பாதுகாப்புக் கண்டறிதல் இருக்கலாம். உதாரணமாக, அவர்களின் விசா 'குணாதிசயத்தின் அடிப்படை' இல் மறுக்கப்பட்டிருக்கலாம் அல்லது இரத்து செய்யப்பட்டிருக்கலாம்.

## யாருடைய பாதுகாப்புக் கண்டறிதல் மதிப்பாய்வு செய்யப்படலாம்?

ஒரு நபர் இனி தீங்கு விளைவிக்கும் அபாயத்தை எதிர்கொள்ள-வில்லை என்று அமைச்சர் நினைத்தால், விசா இன்றி சமூகத்தில் வாழ்பவர்கள் மற்றும் குடிவரவுத் தடுப்புக்காவலில் உள்ளவர்கள் ஆகியோரின் பாதுகாப்புக் கண்டறிதல்களை மாற்றியமைக்க அமைச்சருக்கு ஏற்கெனவே அதிகாரம் உள்ளது.

**இப்போது, சமூகத்தில் உள்ள கீழ்க்கண்டோரு-க்கான பாதுகாப்புக் கண்டறிதல்களை மாற்றியமைக்கும் அதிகாரம் அசைச்சருக்கு உள்ளது:**

- **பிரிட்ஜிங் R விசா வைத்திருத்தல்; அல்லது**
- **அகற்றுதல் அடிப்படையில் வழங்கப்பட்ட பிரிட்ஜிங் E விசாவை வைத்திருக்கின்றவர்கள்.**

## நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களுக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் உங்கள் பாதுகாப்புக் கண்டறிதல் மதிப்பாய்வு செய்யப்படலாம்.

உங்கள் பாதுகாப்பு முடிவு தலைகீழாக மாற்றப்பட்டால், அதன் விளைவு குறித்து எழுத்துப்பூர்வமாக உங்களுக்கு அறிவிக்கப்படும். இந்த முடிவை மறுபரிசீலனை செய்யக் கோருவது இயலுமானது. இது குறித்து உங்களுக்கு அறிவிக்கப்பட்டால், உடனடியாக ஒரு குடிவரவு வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.



# 3. மூன்றாம் நாடு குறித்த ஏற்பாடுகள்

**புதிய சட்டங்கள் மக்களை அவர்களது சொந்த நாடு அல்லாத மூன்றாம் நாடுகளுக்கு நாடு கடத்த ஆஸ்திரேலிய அரசாங்கத்தை அனுமதிக்கிறது. இதன் பொருள் ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்படும் மக்களை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் மற்ற நாடுகளுக்குப் பணம் செலுத்த முடியும்.**

## யாரை மூன்றாவது நாட்டிற்கு நாடு கடத்த முடியும்?

இந்த அதிகாரம், திணைக்களம் ஏற்கெனவே நாடு கடத்த முயற்சிக்கும் நபர்களுக்கு மட்டுமே பொருந்தும். இது எந்த புதிய நாடுகடத்தல் அதிகாரத்தையும் உருவாக்காது - மக்களை எங்கு அனுப்புவது என்பதற்கான கூடுதல் தெரிவுகளை இது திணைக்களத்துக்கு வழங்குகிறது.

**தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் ஆஸ்திரே-லியாவிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய எவரையும் மூன்றாவது நாட்டிற்கு அனுப்பலாம். பிரிட்ஜிங் R விசாக்களில் உள்ளவர்களை மூன்றாவது நாட்டிற்கும் அனுப்ப இயலும்.**

ஒரு நபர் மூன்றாம் நாடு ஒன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவர்களின் பிரிட்ஜிங் R விசா தானாகவே நிறுத்தப்பட்டு, அவர்கள் மீண்டும் தடுப்புக்காவலில் வைக்கப்படுவார்கள்.

இந்த அதிகாரங்கள் பெரும்பாலும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய அல்லது நாடற்றவர்களாகவும், அதனால் அவர்களின் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்ப முடியாதவர்களாகவும் உள்ள மக்களுக்கு எதிராகப் பெரும்பாலும் பயன்படுத்தப்படும்.

## மூன்றாம் நாடுகள் எவை?

ஆஸ்திரேலிய அரசாங்கம் உலகின் வேறு எந்த நாட்டுடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இதுவரை, அவர்கள் நவ்ருவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளனர்.

ஆஸ்திரேலிய அரசாங்கம் ஏற்கெனவே மூன்று பேரை நவ்ருவுக்கு நாடு கடத்த முயற்சித்துள்ளது. சட்ட வழக்குகள் தொடரும் அதே வேளையில், அந்த நாடுகடத்தல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## நான் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் பிரிட்ஜிங் R விசா நிறுத்தப்பட்டதாக உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டால் அல்லது நீங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்றப்படுவதாக உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டால், நீங்கள் உடனடியாக ஒரு குடிவரவு வழக்கறிஞரையும் வேறு ஏதேனும் வழக்கறிஞர்களையும் அல்லது ஆதரவு அளிப்போரையும் தொடர்பு கொள்ள வேண்டும். சட்ட நடவடிக்கை எடுக்க உங்களுக்கு மிகக் குறைந்த நேரமே இருக்கலாம்.




# 4. பயணத் தடைகள்

புதிய சட்டங்கள், குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த எவரும் ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்ய விசா பெறுவதைத் தடுக்க, அமைச்சர் குறிப்பிட்ட நாடுகளுக்கு பயணத் தடைகளை விதிக்க அனுமதிக்கின்றன.

ஆஸ்திரேலியக் குடிமக்களின் நேரடிக் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கு சில வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள் உள்ளன.

இதுவரை பயணத் தடைகள் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை, ஆனால் இது எதிர்காலத்தில் நிகழலாம்.



# 5. குடிவரவுத் தடுப்பில் பொருட்களைத் தடை செய்தல்

புதிய சட்டங்கள், குடிவரவுத் தடுப்புக்காவலில் உள்ள அன்றாடப் பொருட்களை, அலைபேசிகள் உட்பட, தடைசெய்ய அமைச்சருக்கு பரந்த அதிகாரங்களை வழங்கும். மேலும் தடுப்பு அதிகாரிகள் தடைசெய்யப்பட்ட பொருட்களைத் தேடி பறிமுதல் செய்யவும் அனுமதிக்கும். ஆனால் குடிவரவுத் தடுப்புக்காவலில் உள்ள ஒருவரின் அரசியல் தொடர்பு உரிமையில் தலையிடும் பட்சத்தில், அவரிடமிருந்து பொருட்களை எடுக்க முடியாது. இந்த அதிகாரங்கள் இதுவரை எந்தப் பொருளையும் தடை செய்யப் பயன்படுத்தப்படவில்லை.

# இந்தப் புதிய சட்டங்கள் அனைத்திற்கும் என்னைத் தயார்படுத்திக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?

**இந்தச் சட்டங்களால் நீங்கள் பாதிக்கப்படுவீர்களா என்பதைக் கண்டறிய நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம், மேலும் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் உதவியைப் பெறலாம்.**

**பின்வரும் பக்கங்களில் உள்ள நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ளலாம் அல்லது அதை மேற்கொள்ள உங்களுக்கு வசதியாக இல்லை என்றால், இலவச சட்டச் சேவைகளில் ஒன்றைத் தொடர்பு கொள்ளவும்.**



# 1. உங்கள் கடைசி விசா வழங்கல் (VISA GRANT) அறிவிப்பைப் பாருங்கள்

**உங்களிடம் கடைசியாக விசா வழங்கல் அறிவிப்பு இருந்தால், நீங்கள் 'புறப்படும் அடிப்படையில்' (departure grounds) பிரிட்ஜிங் R விசா அல்லது பிரிட்ஜிங் E விசாவை வைத்திருக்கிறீர்களா என்பதைக் கண்டறிய அதைப் பார்க்கவும்.**

உங்கள் விசா 'புறப்படும் அடிப்படையில்' வழங்கப்பட்டிருந்தால், விசா வழங்கல் கீழே உள்ளதைப் போல இருக்க வேண்டும் - மேலும் சிறப்பிக்கப்பட்ட வார்த்தைகளின் வடிவத்தைக் கொண்டிருக்க வேண்டும் ('ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேறுவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகளைச் செய்கிறீர்கள் அல்லது அதற்கு உட்பட்டவராக இருப்பதால், விசா வழங்குவதற்கான தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்ததால், கீழே உள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள விண்ணப்பதாரருக்கு ஒரு பிரிட்ஜிங் E (வகுப்பு WE) விசா வழங்கப்பட்டுள்ளது')

Australian Government
Department of Home Affairs

**BRIDGING VISA GRANT NOTICE**

**Application details**
Date of visa application
Transaction reference number
Application ID
File number

[redacted]

A Bridging E (class WE) Bridging E (General) (subclass 050) visa has been granted to the applicant listed in the table below as you satisfied the criteria for the grant of the visa because you are making, or are the subject of, acceptable arrangements to depart Australia.

**Bridging visa grant details**

| | |
|---|---|
| **Client name** | [redacted] |
| **Bridging visa class** | Bridging E (class WE) |
| **Bridging visa subclass** | Bridging E (General) (subclass 050) |
| **Date of birth** | [redacted] |
| **Client ID** | [redacted] |
| **Visa grant number** | [redacted] |
| **Visa grant date** | [redacted] |
| **Visa cease date** | [redacted] |
| **Passport Number** | [redacted] |
| **Travel Facility** | No Travel |
| **Visa Conditions** | 8207 - No study<br>8401 - Report as directed<br>8506 - Notify change of address<br>8564 - Must not engage in criminal conduct<br>8566 - Must not breach the code of behaviour |

**About your bridging visa**
This bridging visa allows you to remain lawfully in Australia until it ceases.

**Travel overseas**
This bridging visa only allows you to remain in Australia. When you leave Australia, your bridging visa will cease.

Status Resolution (VIC/TAS)
**OFFICE:**Our office is currently closed. All interviews will be conducted by telephone appointment.
**POSTAL:**GPO Box 241 Melbourne VIC 3001
**EMAIL:** vsrt@homeaffairs.gov.au **WEBSITE:** www.homeaffairs.gov.au

# 2. உங்கள் விசா நிலையை (VISA STATUS) இணையவழியில் சரிபார்க்கவும்


**உங்கள் விசா நிலை குறித்து உங்களுக்குத் தெரியாவிட்டால், Visa Entitlement Verification Online (VEVO) சேவையில் உள்நுழைந்து அதை இணையவழியில் சரிபார்க்கலாம்:**

**tinyurl.com/checkvisa1**

**உங்கள் விசா நிலையைச் சரிபார்க்க, உங்களுக்கு பின்வருவன தேவைப்படும்:**

- **உங்கள் கடவுச்சீட்டு அல்லது ImmiCard எண்; மற்றும்**
- **முந்தைய விசா சான்று (Visa Evidence)/வழங்கல் எண் (Grant Number) (அல்லது TRN எண்).**

உங்கள் விசா நிலை விசா பிரிவு (visa class)/துணைப் பிரிவு (subclass) மற்றும் விசா வகை (visa type) பற்றிய தகவல்களுடன் பின்வருமாறு காட்டப்படும்:




உங்கள் பிரிட்ஜிங் E விசா 'புறப்படும் அடிப்படையில்' வழங்கப்பட்டதா என்பதை VEVO உங்களுக்குச் சொல்ல முடியாது.

உங்களிடம் தற்போது பிரிட்ஜிங் E விசா இருந்தால், ஆனால் விசா விண்ணப்பம், நீதிமன்ற வழக்கு அல்லது அமைச்சர் கோரிக்கை நிலுவையில் இல்லை என்றால், நீங்கள் ஒரு வழக்கறிஞரின் ஆலோசனையைப் பெற வேண்டும் - ஏனெனில் உங்கள் பிரிட்ஜிங் E விசா 'புறப்படும் அடிப்படையில்' வழங்கப்பட்டிருக்கலாம்.

# 3. உங்கள் மின்னஞ்சல் முகவரியை திணைக்களத்துடன் புதுப்பித்த நிலையில் வைத்திருங்கள்

**உங்கள் மின்னஞ்சல் முகவரி திணைக்களத்துடன் புதுப்பித்த நிலையில் இருப்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும். மேலும் ஏதேனும் புதுப்பிப்புகளைப் பெற்றால், ஒவ்வொரு நாளும் உங்கள் மின்னஞ்சலை (junk folder உட்பட) சரிபார்க்கவும்.**

**உள்நாட்டு அலுவல்கள் திணைக்களத்துடன் உங்கள் மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பிக்க இந்தப் படிவத்தைப் பயன்படுத்தலாம்:**

**tinyurl.com/updatecontact1**

**உங்கள் மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பிக்க, உங்களுக்கு இது தேவைப்படும்:**

- **உங்கள் கடைசி விசா வழங்கல் (Application ID அல்லது Client ID);**
- **உங்கள் கடவுச்சீட்டு எண்; மற்றும்**
- **உங்கள் நிழற்பட ID-இன் நகல், எடுத்துக்காட்டாக:**
  - **தற்போதைய கடவுச்சீட்டு;**
  - **தற்போதைய ஓட்டுநர் உரிமம்; அல்லது**
  - **பிற செல்லுபடியாகும் அரசாங்க அடையாள அட்டை (ImmiCard போன்றவை)**

உங்கள் முகவரியைப் புதுப்பித்தவுடன், ஒப்புதல் பக்கத்தின் ஸ்கிரீன் ஷாட்டை எடுக்கவும்.



# 4. ஒரு குடிவரவு வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ளவும்

**மேலே உள்ள ஏதேனும் படிகளில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், அல்லது சட்டங்களால் நீங்கள் பாதிக்கப்படுகிறீர்கள் என்று நீங்கள் கவலைப்பட்டால், பின்வரும் இலவசச் சேவைகளில் ஒன்றில் ஒரு வழக்கறிஞருடன் பேசுவதற்கு நீங்கள் ஒரு சந்திப்பை மேற்கொள்ளலாம்:**

## மூன்றாம் நாடுகள் எவை?

ASRC

**ASRC Footscray**

(திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி - காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை)
214-218 Nicholson Street
FOOTSCRAY
(03) 9326 6066

**ASRC Dandenong**

திங்கள் முதல் வெள்ளி வரை - காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை
205 Thomas Street
DANDENONG
(03) 8772 1380

## Victoria இல், South Australia இல் அல்லது Northern Territory இல், தொடர்பு கொள்ளவும்

Refugee Legal:

Level 5, 333 Exhibition Street
MELBOURNE
திங்கள்-வெள்ளி - காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை
(03) 9413 0101

## New South Wales இல் மற்றும் Australian Capital Territory இல், தொடர்பு கொள்ளவும்

RACS
REFUGEE ADVICE & CASEWORK SERVICE

திங்கள்-வெள்ளி -
காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை மற்றும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை
(02) 8355 7227